முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 238/2024

பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி ஜோதிமணி என்பவரின் வாக்குமூலம் Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திருமதி.G.ரேவதி, கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோதிமணி | வயது | : | 68 |
| கணவர் பெயர் | : | துரைராஜ் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | மாப்பிள்ளை நாயக்கன்பட்டி | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |

நாள் : 27-03-2025

பி.வா.சா.2

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் முதல் விசாரணை பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு சொத்துக்கள் எனது மாமனார் ஆசிர்வாதம் கிரயம் வாங்கிய சொத்துக்கள்.

2) என் மாமனார் ஆசிர்வாதம் 6.2.195ல் இறந்துவிட்டார்.

3) ஆசிர்வாதத்திற்கு என் கணவர் துரைராஜ் மட்டும்தான் வாரிசுதாரர்.

4) என் கணவர் 29.3.2017 அன்று இறந்துபோனார். என் கணவருக்கு நானும் என் குழந்தைகளான

அந்தோனிராஜ், ராபர்ட், அரிபர்ட், லோகநாதன் மற்றும் ஜெனித்மேரி ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவோம்.

5) என் மகன் ராபர்ட் 13.10.2020 அன்று இறந்துவிட்டார். அவருக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள் ஆவார்கள்.

6) தாவா சொத்துக்களை விற்பனை செய்யும் காலம் வரை எங்களது குடும்பத்தில் பாகபிரிவினை ஏதும் நடைபெறவில்லை.

7) வழக்கு சொத்துக்கள் சாகுபடிக்கு லாயக்கு இல்லாமல் தரிசு நிலமாக உள்ளது. இந்த சொத்துக்களில் இருந்து எனக்கு பெரிய வருமானமும் இல்லை.

8) எனதுபேரக்குழந்தைகளான 4,5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 12/135 பாகம் மட்டுமே உள்ளது.

9) விற்பனை செய்யும் காலத்தில் இளவர்களுக்கான பாக வீதத்தை தனியாக பிரித்து எடுக்க இயலவில்லை. அவ்வாறு பிரித்து எடுத்தாலும் அது பிரயோஜனமாக இருக்காது.

10) என் மகன்இறந்தபிறகு 3ம் பிரதிவாதி 4,5 பிரதிவாதிகளை வளர்ப்பதற்கு போதிய வருமானம் இல்லாமல் சிரமம் பட்டுக்கொண்டிருக்கிறார்.

11) இந்த வழக்கு சொத்துக்களை விற்பனை செய்தபோது இளவர்களின் பங்கு தொகையை கிரயம் பெற்றவர்கள் வங்கியில் வைப்பீடு செய்துவிட்டார்கள். அந்த தொகை நாளது தேதி வரை இளவர்கள் பெயரிலேயே இருக்கிறது. அந்த வைப்பீடு செய்த தொகையில்இருந்து வரும் வட்டியை வைத்துதான் இளவர் குழந்தைகளை என் மருமகள் பராமரித்து வருகிறார்.

12) தாவா சொத்துக்களை விற்பனை செய்த வகையில் இளவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

13) வழக்கு சொத்துக்கள் வாதிகளுக்கு சொந்தம் என்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-கா.பூர்ண ஜெய ஆனந்த்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்